# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
## வர்த்தக அமைச்சு

# ஆர்வ வெளிப்பாடு (EOI)

**கடல்சார் மற்றும் கடல்கடந்த சேவைகள் துறையில் இயலுமை ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு ஆலோசனை/ நிறுவனம் ஒன்றின் ஆட்சேர்ப்பு**

**ஒப்படை இல.: EDB/2021/CON/QCBS/05**

திருகோணமலை துறைமுகத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் இலங்கை துறைமுகங்கள் சேவைகள் தொடர்பிலும் படகுகளின் lay-up / stacking வசதிகளுக்காக வர்த்தக வாய்ப்புகளை உருவாக்குவதற்கு சந்தை, தொழில்நுட்ப மற்றும் நிதி அம்சங்களில் இயலுமை ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு தொழில்துறை மற்றும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையுடன் நெருங்கி பணியாற்றுவதற்கு தேவையான தகுதி, அனுபவம் மற்றும் தகைமை உடைய ஆலோசனை/ நிறுவனத்தில் இருந்து இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் (EDB) ஆர்வ வெளிப்பாடுகள் கோரப்படுகின்றன.

## பணி நோக்கம்

இந்த ஆலோசனை/ நிறுவனமானது இவ்வாறான திட்டங்களின் தொழில்நுட்ப, நிதி, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் இயலுமையுடன் தேவையான முதலீட்டு மற்றும் மேம்பாட்டு இடைவெளிகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் விநியோகத்திற்கு இலங்கையின் தற்போதைய தொழில்நுட்ப திறன்களை மதிப்பீடு செய்தல், படகு மற்றும் அது சார்ந்த சேவைகளின் lay-up / stacking வசதிகள் உட்பட கடல்சார் மற்றும் கடல்கடந்த சேவைகளின் பல்வேறு அம்சங்களின் இயலுமை தொடர்பில் ஆழமான ஆய்வை மேற்கொள்ளல் வேண்டும்.

www.srilankabusiness.com என்ற இணையதளத்தின் “Announcement” இன் கீழ் வெளியிடப்பட்ட TOR இல் விபரிக்கப்பட்டவாறு ஆலோசனை/ நிறுவனம் சந்தை, தொழில்நுட்பம் மற்றும் பொருளாதாரம் மற்றும் நிதி இயலுமை முடிவுகளை வழங்குவதற்கு கோரப்படுகின்றது. பணி நோக்கத்தை நிறைவேற்றுவதில், இந்த ஆலோசனை/ நிறுவனம் திருகோணமலை துறைமுகத்திற்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும்.

## தேவைகள்

**ஆலோசனை/ நிறுவனம்**

a) ஒப்படை மற்றும் ஒப்படை பற்றிய புரிதலை நிரூபிப்பதில் வெளிப்படையாக ஆர்வ வெளிப்பாட்டை (EOI) குறிக்கும் சட்டபூர்வ பெயர், நிறுவனக் கட்டமைப்பை தெளிவாக விளக்கவும்.

b) நிறுவனத்தின் உரிமை மற்றும் பதிவு

c) கடந்த 5 ஆண்டுகளுக்கான நிதி அறிக்கை

d) கடல்சார் ஆய்வு மற்றும் ஆலோசனையில் தொழில்துறை அங்கீகாரம் பெற்ற ஆலோசகர்களின் சேவைகளை உள்நாட்டில் அல்லது வெளி மூல சேவைகள் திறனுடன் தொடர்புடைய தொழில்நுட்ப அறிவுடன் ஒத்த அளவிலான ஆலோசனை பணியில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

e) இதனையொத்த ஒப்படைகளை மேற்கொண்டதனை நிரூபிக்கப்பட்ட தளப் பதிவை விளக்குவதோடு உத்தேசிக்கப்பட்ட முடிவுகளை வழங்கும் திறன் கொண்ட ஒரு நல்ல வளம் கொண்ட குழுவை கொண்டிருத்தல்.

**விண்ணப்ப நடைமுறை**

சேவை வழங்குநர்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “கடல்சார் மற்றும் கடல்கடந்த சேவைகள் துறையில் இயலுமை ஆய்வு ஒன்றை மேற்கொள்வதற்கு ஆலோசனை/ நிறுவனம் ஒன்றின் ஆட்சேர்ப்பு “EOI” ஒப்படை இல.: EDB/2021/CON/QCBS/05” என்று குறிப்பிட்டு 2021 நவம்பர் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பெறுகை பிரிவில் (கட்டம் 6) வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட்டு பின்வரும் முகவரிக்கு ஆர்வ வெளிப்பாட்டை (EOI) சமர்ப்பிக்க கோரப்படுகின்றனர். தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் ஒப்பந்த மதிப்பீடு மற்றும் வழங்கலுக்காக EDB இற்கு நிதி முன்மொழிவுடன் தொழில்நுட்ப முன்மொழிவை சமர்ப்பிக்க கோரப்படுகின்றனர்.

**www.srilankabusiness.com** என்ற இணையதள முகவரியில் “Announcement” இன் கீழ் குறிப்பு விதி முறையை (TOR) தரவிறக்கம் செய்ய முடியும்.

தரம் மற்றும் செலவு அடிப்படை தேர்வு (QCBS) முறையை பின்பற்றிய அரசாங்க பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைய சந்தைப்படுத்தல் நிபுணர் தேர்வு செய்யப்படும்.

மேலதிக விபரங்களுக்கு, 2300705-11 (நீடிப்பு 281/ 0774310945) என்ற தொலைபேசி இலக்கத்தில் ஏற்றுமதி சேவைகள் பிரிவில் பாக்யா விஜேரத்ன (ஏற்றுமதி ஊக்குவிப்பு அதிகாரி) அல்லது 2303974 இல் மனோஜா திசாநாயக்கவை (பிரதிப் பணிப்பாளர்) தொடர்பு கொள்ளவும்.


**தலைவர்**

**திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு (CPCD)**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**

**பெறுகை பிரிவு, 6ஆவது மாடி**

**NDB – EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு-2.**

**தொலைபேசி: 0112300700 தொலைநகல்: 0112300715**

**இணையதளம்: www.srilankabusiness.com**